# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව සහ ගිණුම් - 2019
# නුවරඑළිය දිස්ත්‍රික්කය

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும் - 2019
## நுவரெலியா மாவட்டம்

## Annual Performance Report & Accounts – 2019
## Nuwara Eliya District



**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - නුවරඑළිය**

**மாவட்ட செயலகம் - நுவரெலியா**

**District Secretariat –Nuwara Eliya**

# 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம், நுவரெலியா.
# செலவினத் தலைப்பு இலக்கம் : 260

## உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வள விபரம்

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

### 1.1.1 மாவட்ட எல்லைகளும் பூகோள பின்னணியும்

இலங்கையின் முகடாக கவிகளில் வர்ணிக்கப்படும் நுவரெலியா மாவட்டம் கண்டி, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களை மாயங்களாக கொண்டு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 900 அடியிலிருந்து 8000 அடி வரை விரிந்து செல்லும் இலங்கையின் அதி உயர் மலையான பிதுருதாலகலை மலைத்தொடர், கிரிகல்பொத்த மலை, கொட்டுபொல மலை, கிகிலியாமான மலை, கிரேட்வெஸ்டன் மலை, ஹக்கலை மலை மற்றும் புனித சமநலகந்த ஆகிய மலைகள் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ளன.

அத்துடன் லக்ஷபான, டெவோன், எல்ஜின், சென்ட்கிளேயார், ரம்பொடை, பேகஸ், குறுந்து எல்ல, கெரண்டி எல்ல ஆகிய நீர்வீழ்ச்சிகளும், மகாவலி மற்றும் களனி கங்கைகளின் ஊற்றும், அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் பிரசித்தம் பெற்றுள்ள ஹோர்ட்டன் சமவெளி சரணாலயமும், ஹக்கலை தாவரவியற் பூங்காவும் இங்கு அமைந்திருப்பதால் சுற்றுலா பயணிகளின் மனதை கவரக்கூடியதாக உள்ளது. அத்துடன் இலங்கையில் நீர் மின் உற்பத்தியில் முன்னிலையில் உள்ள மவுஸ்ஸாகலை, காசல்ரீ, கெனியோன், நோர்டன் பிரீஜ், கொத்மலை, ரன்தெனிகலை மற்றும் விக்டோரியா போன்ற நீர் தேக்கங்களில் பெரும் பகுதி நுவரெலியா மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

சனத்தொகையில் 57.1% இலங்கை தமிழர்களாக இருக்கும் அதேவேளை எஞ்சிய வீதத்தில் சிங்களவர்களும் ஏனையோரும் அடங்குவர். மாவட்டத்தில் நிலவும் விசேடமான காலநிலை விவசாயத்திற்கு மிகவும் உகந்ததாக இருப்பதுடன், மரக்கறி செய்கையில் மிகவும் பிரசித்தம் அடைந்துள்ளது.

1741 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இம்மாவட்டத்தின் பொதுவான மழை வீழ்ச்சி 75 அங்குலமாக இருப்பதுடன், ஆகக் குறைந்த வெப்பநிலையை கொண்ட பிரதேசமும் (நுவரெலியா) இந்த மாவட்டத்தில் காணப்படுவது விசேடமானதாகும்.



### 1.1.2 நுவரெலியா மாவட்டத்தின் வரலாற்று பின்னணி

கி.வ. 1819 இல் ஆங்கில இனத்தவாரன ஜோன் டேவி அவர்களால் நுவரெலியா கண்டுப்பிடிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் பின் சிறிய இங்கிலாந்து என நுவரெலியா புனைப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. சுய தேவையினை முன்னிட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசமாகவும், சுற்றுலா மையமாகவும் அத்தோடு நிர்வாக அலகாகவும் நுவரெலியா வெள்ளையர்களின் பாசத்தை வென்றெடுத்த அவர்களின் இரண்டாவது தாய் நாடாக விளங்கியது. அதற்கான காரணம் நுவரெலியாவில் நிலவிய காலநிலை அவர்களின் நாட்டின் காலநிலைக்கு ஒப்பானதாக இருந்தமையேயாகும்.

இருப்பினும் மரபு வழிக் கதைகள் மற்றும் பதிவாகியுள்ள வரலாற்றுச் சான்றுகளுக்கு அமைவாக நுவரெலியா மாவட்டத்தின் வரலாறு வரலாறுக்கு முந்திய காலம் வரையில் பரந்துள்ளது. அதற்காக ஹோர்ட்டன் சமவெளி சிறப்பான தொல்பொருளியல் முக்கியத்துவத்துடன் கூடிய இடமாக இனங்காணப்பட்டுள்ளது. பண்டைய வரலாற்றுக் காலத்தில் மத்திய மலைநாட்டில் மக்கள் பரந்து வாழ்ந்த ஒரு பிரதேசமாக ஹோர்ட்டன் சமவெளி தொல்பொருளியலாளரிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கை தீவின் ‘‘இவயிம்’’ புத்தகத்திற்கு அமைய ருஹுனு, மாயா, பிஹிட்டி எனும் முச்சிங்களத்தின் ருஹுனு நாட்டுக்குரிய நாடுகள் 42 ஆகும் எனவும், கொத்மலை ரட்ட, மத்துரட்ட, கொட ரட்ட, கட்டுபுலுவட்ட, போன்ற நாடுகளில் பல நுவரெலியாவிற்குரியதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நுவரெலியா தேயிலைச் செய்கையில் முன்னனி வகித்து வர்த்தக ரீதியில் பிரபல்யமான இடத்தை பெற்றுக்கொண்டுள்ளபோதிலும், பண்டைய காலத்தில் இது அதிக அளவில் யானைகள் நிறைந்த வனப்பிரதேசத்தை கொண்டிருந்ததென சொல்லப்படுகின்றது. நுவரெலியா மாவட்டமானது வலப்பனை, ஹங்குரான்கெத்த, கொத்மலை, நுவரெலியா, மஸ்கெலியா ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய மலைநாட்டு ஈரபூமி பிரதேசமாகும். பண்டைய அரசர்கள் இப்பகுதியை அதிகமான மக்கள் வாழும் பிரதேசமாக மாற்றாததன் காரணம் இப்பகுதியை பாதுகாப்பிற்குரிய இடமாகவும், மழை வீழ்ச்சிக் கூடிய நீர் வளப்பிரதேசமாகவும் பயன்படுத்தியமையேயாகும்.

வரலாற்று சான்றுகள் கிடைக்காவிட்டாலும், இராவண கதைகளுக்கு நுவரெலியா வரலாறு தொடர்பில் விசேட இடமொன்று உரித்தாகும். புராணக் கதைகளின்படி பண்டைய வரலாற்றுக் காலத்தில் அரசர் இராவணன் பதுலு பிரதேசத்தை தனது தலைநகராக வைத்திருந்தார் எனவும், அந்நிர்வாக பிரதேசத்தில் நுவரெலியாவும் அடங்கியதாகவும், இராவணன் சீதாதேவியை கடத்தி வந்து வலப்பனை பரனகம பிரதேசத்தில் அதாவது தற்போது ரந்தனிகலை நீர்த்தேக்கத்திற்காக நீரில் மூழ்கியுள்ள ஸ்தீரபுர மலையின் கற்குகையொன்றில் மறைத்து வைத்திருந்தார் எனவும் சொல்லப்படுகின்றது. அங்கு காற்றோட்டமும், சூரிய ஒளியும் கிடைக்காத காரணத்தினால் சீதா தேவிக்கு கண் நோய் ஏற்பட்டதெனவும், அதனால் அவருக்கு சூரிய ஒளி கிடைக்கும் பொருட்டு அவரை கொண்டு வந்து வைத்திருந்த பிரதேசம் சீதாஎலிய ஆகியதெனவும் மேலும் குறிப்பிடப்படுகின்றது. சீதாதேவி பிரிவுத் துயரால் அழுது புலம்பிய அப்பிரதேசம் வலப்பனை என புராதன காலந்தொட்டு அழைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் விஜய அரசரால் துரத்தப்பட்ட குவேணி, தனது இரண்டு பிள்ளைகளுடனும் கொத்மலை தொரகல மற்றும் யக்கினிகல பிரதேசங்களுக்கு தப்பியோடி வசித்து வந்தார் எனவும் புராணக் கதைகள் கூறுகின்றன. அவள் இயக்கர் குலத்தை சேர்ந்தவரால் கொல்லப்பட்ட பின்னர் அவளின் இரு பிள்ளைகளும் சமவை காட்டுக்கு தப்பியோடி சென்று வாழ்ந்து வந்தார்கள் எனவும், அவர்கள் மூலமாகவே வேடர் குலம் உருவாகியதெனவும் மேலும் விபரிக்கப்படுகின்றது.

ஹங்குரான்கெத்த, வலப்பனை, கொத்மலை ஆகிய பிரதேசங்கள் வரலாற்றுச் சான்றுகளை கொண்டுள்ள குறிப்பிட்ட வரலாற்றுக்கு உரித்தான பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களையொட்டிய பல்வேறு இடங்கள் பற்றி வரலாற்றுச் சாதனைகள் தொடர்பில் தொடந்து கலந்துரையாடப்பட்டுள்ளமை அதற்கு சிறந்த உதாரணமாகும். அநுராதபுர நகரை ஆரம்பித்த பண்டுகாஹய இளவரசன் அவரின் யுத்த ஏற்பாட்டு நடவடிக்கைகளின் போது தொலுகல பிரதேசத்தை பயன்படுத்தினார் என மகா வம்சத்தில் குறிப்பிடபப்பட்டுள்ளது. இப்பிரதேசம் ஹங்குரான்கெத்த தொலுகல பிரதேசமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அத்துடன் துட்டகைமுனு அரசர் மற்றும் கொத்மலை தொடர்பில் விசேட வரலாறு ஒன்று உள்ளது. துட்டகைமுனு இளவரசர் தாம் முடிசூடுவதற்கு முன்னர் இலங்கை தீவின் ஐக்கியத்தின் பொருட்டு எல்லாளனுக்கு எதிராக சேனையை கொத்மலை பிரதேசத்தில் இருந்துகொண்டே

தயார்ப்படுத்தினார். அத்துடன் காவன்திஸ்ஸ அரசனால் சுப்புல்பிட்டிய விகாரையில் போதி மரக்கன்றொன்று நடப்பட்டதாக கூறப்படுகின்றது.

கி.மு.103 இல் வலகம்பா அரசர் தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பகைவரின் படையெடுப்பு காரணமாக வலப்பனை பிரதேசத்திற்கு தப்பி வந்து பாதுகாப்பிற்காக தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் யட்டிமாதுர, வில்வல, அரந்தன, கடதொர போன்ற ரஜ மகா விகாரைகள் அமைத்தார் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. பொலன்நறுவை காலப்பகுதியில் அரசர் விஜயபாகு அவர்கள் சிவனொளிபாத மலையினதும், சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர்களினதும் பராமரிப்பிற்காக அரச நன்கொடை நிலத்தை வழங்கியதாக அம்பகமுவையில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. தற்போது அது அம்பகமுவ கல்வெட்டு என அழைக்கப்படுகின்றது.

அத்துடன் கி.வ.1215- 1236 வரையில் பொலன்நறுவை இராசதானி காலத்தில் காலிங்க மாக முற்றுகை காரணமாக விஹார விகாரை அழிக்கப்பட்டதால், வாவிஸ்ஸர தேரர் தலைமையிலான தேரர்கள் புனிதத் தந்தம் மற்றும் பிச்சா பாத்திர புனித தாதுக்களின் பாதுகாப்பிற்காக அவற்றை கொத்மலை பிரதேசத்திற்கு கொண்டு வந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்பதிவ காலப்பகுதியில் மூன்றாவது விஜயபாகு அரசர் புனித தந்தத்தின் பாதுகாப்பு கோரி வெலிகல பிரதேசத்திற்கு கொண்டு வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. புனித தந்தத்தை தமது இரசதானிக்கு கொண்டு செல்வதற்காக வருகைதந்த விஜயபாகு அரசர் தங்கியிருந்த திம்புல கந்த தற்போது விஜயபாஹுகந்த எனவும், பெரஹெர தீர்மானிக்கப்பட்ட கிராமம் நியம்கம்தொர எனவும், பெரஹெரவிற்கு மலர்கள் வழங்கப்பட்ட கிராமம் மல்தெனிய எனவும் பெயரிடப்பட்டுள்ளதென்பது பிரதேச வாசிகளின் நம்பிக்கையாகும். அத்துடன் சீதாவக ராஜசிங்க அரசர் சிவ சமயத்தை தழுவிய பின்னர் அரிட்தக்கி வென்டு பெருமாள் அவர்களிடம் கொத்மலை பிரதேசத்தை ஒப்படைத்ததாக கூறப்பப்படுகின்றது.

மலைநாட்டு பிரதேசம் இலங்கையின் முக்கிய நிர்வாக நிலையமாக மாறியதால் நுவரெலியா மாவட்டத்திற்குரிய வலப்பனை, கொத்மலை, ஹங்குரான்கெத்த போன்ற பிரதேசங்கள் படிப்படியாக மக்கள் வாழும் பிரதேசங்களாக மாறின. அப்பிரதேசம் அரசரின் நேரடியான ஆட்சிக்கு கீழ் கொண்டுவரப்பட்டதாக வரலாற்று ஆதாரங்களுக்கு அமைய தெளிவாகின்றது. வலப்பனை பிரதேசமானது விலமதர்மசூரிய அரசருக்கு போர்த்துகேயர்களிடமிருந்து பாதுகாப்பளித்த பிரதேசமாகும். பின்னர் அரசர் அங்கிருந்த மலுவேகொட் ரஜ மகா விகாரையை புனரமைத்தார் எனவும், அவரால் மாளிகாத்தென்னையில் அரச மாளிகையொன்று நிர்மாணிக்கப்பட்டதாகவும், வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. கி.வ. 1635-1687 வரையில் அரசாண்ட அரசர் இரண்டாம் இராஜசிங்க அவர்களுக்கும் கொத்மலை ஹரங்கல, வலப்பனை ராசிங்கள போன்ற பிரதேசங்கள் பாதுகாப்பு அளித்த பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டிருப்பதுடன், அப்போது தியதிலக்க நகரம் என அழைக்கப்பட்ட இப்பிரதேசம் ஹங்குரான்கெத்த என இவ் அரசராலேயே பாவிக்கப்பட்டதாக குறிப்படுகின்றது. கி.வ. 1744 - 1782 வரையில் அரசாண்ட அரசர் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க அவர்களால் ஒல்லாந்து ஆட்சிக்காரர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஹங்குரான்கெத்த அரத்தன ரஜமகா விகாரையில் புனித தந்தம் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அதன் பின்னர் அவ்விகாரையை மையமாகக் கொண்டு புனித தந்தத்திற்கு பூஜைகளை நடாத்தும் பொருட்டு பெரஹெர ஆரம்பிக்கப்பட்டதாகவும், பின்னர் அப்பெரஹெர ஹங்குரான்கெத்த எசல பெரஹெர என அழைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரதேசம் இடைக்கிடையே அரசர்களுக்கு பாதுகாப்பு வழங்கியதுடன், நிர்வாக நிலையமாக இருந்தமை மந்தாரம்நுவர புத்தகம் மூலமாகவும், பிரித்தானிய குடியேற்ற ஆட்சி ஆவணங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 1803 இல் அரசர் ஸ்ரீ விக்ரம இராஜசிங்க அவர்கள் தமது அந்தப்புர பெண்களுடன் ஹங்குரான்கெத்த பிரதேசத்திற்கு வந்து மாளிகை அமைத்து வாழந்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இறுதியில் இந்நாட்டை கைப்பற்றிய ஆங்கிலேயர் நுவரெலியா நகரை விடுமுறை விடுதியாகவே அபிவிருத்தி செய்தனர். அதில் முக்கிய பங்கு வகித்தவர் ஆளுநர் எட்வட் பான்ஸ் அவர்களேயாவர். தற்போது கிரேண்ட் ஹோட்டல் நடாத்தப்படுவது ஆளுநர் எட்வட் பான்ஸ் அவர்களால் தமது சுகபோக வாழ்விற்காக நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு விடுதியிலேயாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கம்பளை, நுவரெலியா மற்றும் பதுளை போன்ற பிரதேசங்கள் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட வீதி நுவரெலியாவில் மக்கள் செறிவாக வாழ்வதற்கு காரணமாக அமைந்தது. கோப்பி, சிங்கோனா செய்கைகள் நலிவடைந்த பின்னர் குடியேற்ற ஆட்சியாளர்களினால் தேயிலை செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாலும், மரக்கறி செய்கைக்கு உகந்த காலநிலை நிலவிய காரணத்தினாலும், நுவரெலியா பிரதேசம் வணிக ரீதியில் முக்கியத்துவம் பெற்றது. ஆங்கிலேயரால் நுவரெலியா பிரதேசம் படிப்படியாக நிர்வாக அலகாக விருத்தி செய்யப்பட்டதால் தற்போதும் பிரித்தானிய கட்டிட நிர்மாண இலட்சனைகளுடனான நிர்மாணிப்புகள் இறந்த காலத்தை நினைவூட்டும் அம்ச ங்களாக உள்ளன. அத்துடன் தேயிலை செய்கையின் பரம்பல் மற்றும் அவற்றின் நாளாந்த அலுவல்களை

முன்னிட்டு தென் இந்தியாவிலிருந்து கூட்டிவரப்பட்ட தமிழ் மக்கள் சமூகத்தின் கலப்பினாலும் நுவரெலியா மாவட்டம் முழுவதும் கலப்பு மக்கள் திரட்சியொன்று உருவாகியதுடன், அவர்களுக்குரிய கலாசாரங்களின் கலப்பும் ஏற்பட்டுள்ளது. ஆதலால் தற்போது நுவரெலியா மாவட்டமானது பெரும்பான்மையாக தமிழ் மக்களைக்கொண்டிருப்பதற்கான காரணம் இந்த வரலாற்று நிகழ்வுகளாகும்.

### 1.1.3 மாவட்ட வரைபடம்




| காணி உபயோகத்தின் அடிப்படையிலான விஸ்தீரணம் | | | |
|---|---|---|---|
| | அலகு | விஸ்தீரணம் | சதவீதம் |
| தரைப்பகுதி | ஹெக்டயார் | 1,690.2 | 97.08 |
| உள்ளக நீர்த்தேக்கங்கள் | ஹெக்டயார் | 50.8 | 2.92 |
| மொத்த நிலப்பகுதி | ஹெக்டயார் | 1,741.0 | 100.0 |
| பயிரிடப்பட்ட மொத்த நிலப்பகுதி | ஹெக்டயார் | 737.3 | 42.35 |
| பயிரிடப்படாத மொத்த நிலப்பகுதி | ஹெக்டயார் | 274.4 | 15.76 |
| வன மொத்த நிலப்பகுதி | ஹெக்டயார் | 729.2 | 41.89 |
| மொத்த நிலப்பகுதி | ஹெக்டயார் | 1,741.0 | 100.0 |
| மூலாதாரம் - மாவட்ட புள்ளிவிபரப் பிரிவு, நுவரெலியா | | | |

### 1.1.4 மாவட்ட செயலகத்தின் பொதுவான தரவுகள்

| தொடர் இலக்கம் | கோரப்பட்ட தரவு | எண்ணிக்கை/ பெறுமதி / விபரம் | |
|---|---|---|---|
| | **மாவட்டம்** | **நுவரெலியா** | |
| **1.** | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | 05 | |
| **2.** | கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை | 491 | |
| **3.** | சனத்தொகை | 763,209 | |
| **4.** | வாக்காளர்களின் எண்ணிக்கை | 569,028 | |
| **5.** | நகர சபை | 02 | |
| **6.** | மாநகர சபை | 01 | |
| **7.** | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | 09 | |
| **8.** | பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை<br>தேசியப் பட்டடியல் உறுப்பினர்கள் | 08<br>01 | |
| **9.** | மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை | 17 | |
| **10.** | மாவட்ட மக்களின் வாழ்வாதாரம்/வர்த்தக பாங்கு (சுருக்கமாக) | பெருந்தோட்டக் கைத்தொழில் சார்ந்த தொழில்கள் மற்றும் விவசாயம் | |
| **11.** | அலுவலர் குழாம் | அங்கீகரிக் கப்பட்ட | மெய் |
| | | 1,455 | **1,162** |
| **12.** | சுற்றுலா விடுதி/விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை<br>உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குரியது<br>அரசாங்க நிர்வாக அமைச்சுக்குரியது | 1<br>2 | |

**1.1.5 நுவரெலியா மாவட்ட சனத்தொகை தரவுகள்**

பால் அடிப்படையில்




| | |
|---|---|
| ஆண் | 361,684 |
| பெண் | 394,575 |
| மொத்தம் | 756,259 |

**(2012 கணக்கெடுப்பின் படி)**

**பிரதேச செயலகப் பிரிவு மற்றும் துறைகள் அடிப்படையில் சனத்தொகையும் அடர்த்தியும் - 2017**

| பிரதேச செயலகப் பிரிவு | Population | | | | Area (Sq.Km) | Density (For 1 Km) |
|---|---|---|---|---|---|---|
| | Urban | rural | Estate | Total | | |
| கொத்மலை | 0 | 67,135 | 41,377 | 108,511 | 225 | 482 |
| ஹங்குரான்கெத்த | 0 | 80,666 | 14,277 | 94,943 | 229 | 415 |
| வலப்பனை | 0 | 68,901 | 42,762 | 111,633 | 320 | 349 |
| நுவரெலியா | 27,975 | 42,568 | 156,919 | 227,462 | 478 | 476 |
| அம்பகமுவ | 15,085 | 52,722 | 152,822 | 220,629 | 489 | 451 |
| மொத்தம் | 43,060 | 311,992 | 408,157 | 763,209 | 1,741 | 438 |

மூலாதாரம் - தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

### தூரநோக்கு

வினைத்திறனானதும் உற்பத்தித்திறனானதுமான சேவையின் மூலம்
நுவரெலியா மாவட்ட மக்களுக்கு
உயர்வான வாழ்க்கை தரத்தை ஏற்படுத்திக்கொடுத்தல்.

### பணிக்கூற்று

மாவட்டமும் மாவட்ட மக்களும் தேசிய
அபிவிருத்தியில் பங்களிப்பு செய்யும் வகையில்
அரச கொள்கைகளுக்கு அமைய மிக சிறந்த
திட்டத்துடனான வளங்கள்,
நிறுவன உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில்
நெறியாளப்பட்ட ஒருங்கிணைப்பின்
மூலம் மக்களின் தேவைகளை வினைத்திறனாகவும்
நேர்மையாகவும் நட்புடனும்
நிறைவேற்றுதல்.

## குறிக்கோள்கள்

- அரச மற்றும் தனியார் துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பயனுறுதியான அரச சேவையை கட்டியெழுப்பல்.
- பல்வேறு சமூகப் பொருளாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்தல், நிறைவேற்றுதல், முகாமைப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை கண்காணித்தல்.
- கலாசார விழுமியங்கள், நம்பிக்கை, பல்லினத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றை மேம்படுத்தல்.
- சிறந்த முகாமைத்துவத்தினூடாக அரச கொள்கைகளுடன் இணைந்ததாக பிரிவுகளுக்கும், திணைக்களங்களுக்குமிடையே தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

- அனைத்து அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அரச கடமைகளை நிறைவேற்றுதல்.
- மத்திய அரசாங்கத்தினாலும், மாகாண சபையினாலும் குறித்தொதுக்கப்பட்ட வருமானங்களை சேகரித்தல்.
- அனைத்து பிரதேச செயலகங்களினதும் இணைப்பு, கண்காணிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்.
- மாகாண சபை/ அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் பல்வேறு அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்படுகின்ற ஏனைய நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- மாவட்ட மட்டத்தில் பொது, சமய, கலாசார மற்றும் ஏனைய விழாக்களை ஏற்பாடு செய்யும் பொறுப்புகளைக் கொண்டிருத்தல்.
- அரச நிறுவனங்களுக்கும், சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கும் இடையேயான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் குறிப்பிட்ட சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபடல்.

## 1.4 தாபனக் கட்டமைப்பு



## 1.5 மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்கள்




| பிரதேச செயலகங்களின் விஸ்தீரணம் | | |
|---|---|---|
| | | |
| **பிரதேச செயலாளர் பிரிவு** | **விஸ்தீரணம் (ஹெக்.)** | **சதவீதம்** |
| கொத்மலை | 225.0 | 12.92% |
| ஹங்குரான்கெத்த | 229.0 | 13.15% |
| வலப்பனை | 320.0 | 18.38% |
| நுவரெலியா | 478.0 | 27.46% |
| அம்பகமுவ | 489.0 | 28.09% |
| மொத்தம் | 1741.0 | 100.0 |
| | | |
| மூலாதாரம் - மாவட்ட புள்ளிவிபரப் பிரிவு, நுவரெலியா | | |

# அத்தியாயம் 2 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

## 2.1 சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2.1.1 சிறப்பு அடைவுகள்

1. கிராமசக்தி வேலைத்திட்டத்தின் கீழ் சிறந்த நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகைகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், பல புதிய வருமானம் கிடைக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்கக்கூடிதாக இருந்தது.

2. சிறுவர்களுக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அறிவு திறன் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. நுவரெலியா மாவட்டத்தில் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு சிறந்த முறையில் செயற்படும் விசாரணை அலகொன்றை ஸ்தாபித்தல்.

4. பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு தகவல் நிலையமொன்றை ஸ்தாபித்தல்.

### 2.1.2 சவால்கள்

1. காணிப் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களுக்கான தகுந்த வாழ்விடங்களை இனங்காண்பதில் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

2. இயற்கை அனர்த்தங்கள் காரணமாக செயற்பாடுகள் தாமதமாதல்.

3. மனித செயற்பாடுகள் காரணமாக வனம் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களின் அளவு குறைவடைதல்.

4. வாகனங்கள் பற்றாக்குறை மற்றும் அரச நிறுவனங்களில் ஓட்டத்திற்கு தகுந்த வாகனங்கள் இல்லாத காரணத்தினால் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் கிராமப் பகுதிகளுக்கு பார்வையிட செல்லும்போது சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

5. மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் (சிவில்) எண்ணிக்கை குறைவாகையால், செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போதும், உரிய நேரத்திற்கு செயற்றிட்டங்களை பூர்த்தி செய்வதிலும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### 2.1.3 எதிர்கால இலக்குகள்

1. கடல் மட்டத்திலிருந்து 2600-5000 உயரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தகுந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தெரிவு செய்து கோப்பி செய்கையை (கோப்பி அராபிகா லக்பரகும் வர்க்கம்) திட்டமிட்டு நிறுவுவதற்கு ஆரம்பித்தல். இதன்மூலம் நாங்கள் அதிக அளவிலான அன்னிய செலவாணியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

2. நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் பொருட்டு சுற்றுலா மனங்கவர் பிரதேசங்களை உள்ளடக்கி சுற்றுலா வழிகாட்டல் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல்.

3. ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள "நுவரெலியா மாவட்டத்தின் விவசாய பொருளாதார அபிவிருத்திக்கான உபாயத்திட்டம் 2021-2025" இற்கு அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றவுடன் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தல்.

4. 5 புதிய பிரதேச செயலகங்களை/ துணை அலுவலகங்களை ஸ்தாபிப்பதற்கான திட்டம்.

நிறுவனத் தலைவர்

M.B.R. Pushpakumara
District Secretary / Government Agent
Nuwara Eliya

# அத்தியாயம் 3 - 2019 டிசெம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

ஏசீஏ- எப்

## 3.1 2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீட்டு 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2019 | உண்மை நிலை 2018 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | | |
| - | **வருமானம் அல்லாத பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 2,872,675,878 | 1,818,381,327 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 42,467,903 | 179,643,636 | ஏசீஏ-4 |
| 40,000,000.00 | முற்பணக் கணக்குகள் -11 | | 29,632,371 | 26,852,003 | ஏசீஏ-5 |
| | முற்பணக் கணக்குகள் -12 | | 7,945,734 | 7,777,230 | |
| - | ஏனைய பெறுகைகள் | | 161,119,221 | 103,696,931 | 5/5/(ஏ)/5(பி) |
| 40,000,000.00 | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **3,113,871,106** | **2,136,348,727** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **3,113,871,106** | **2,136,348,727** | |
| | கழி : செலவினம் | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 420,000,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 416,397,012 | 386,913,202 | |
| 64,200,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 63,286,368 | 64,930,074 | ஏசீஏ-2(ii) |
| 2,800,000.00 | மாற்றல்கள் | 7 | 2,140,576 | 2,089,768 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | | - | |
| **487,000,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **481,823,956** | **453,933,044** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 14,100,000.00 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 12,235,211 | 11,435,930 | |
| 11,200,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 8,556,683 | 10,108,304 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 1,700,000.00 | மனித வள அபிவிருத்தி | 14 | 1,336,382 | 1,652,608 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | | | |
| **27,000,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **22,128,276** | **23,196,843** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **68,250,935** | 338,553,937 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 22,075,411 | 292,161,237 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள - 11** | | 40,344,189 | 40,018,540 | |
| | **முற்பணக் கொடுப்பனவுகள் - 12** | | 3,831,336 | 6,374,160 | ஏசீஏ-5 |
| **514,000,000.00** | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | 572,203,166 | 815,683,824 | 5/5/(ஏ)/5(பி) |
| | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | 2,541,667,940 | 1,320,664,903 | |

## 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,318,136,264 | 1,072,887,249 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 101,017,353 | 92,419,933 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 900,878.00 |
| | | 4,177,955 | |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,423,331,572** | **1,166,208,060** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | (271,230,325) | (125,064,496) |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 2,318,136,264.00 | 1,072,887,249 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 372,247,677 | 217,484,429 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 4,177,955 | 900,878 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,423,331,571** | **1,166,208,060** |

பக்க இலக்கம் 04 முதல் 49 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 50 முதல் 59 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

........................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

பெயர்:
பதவி :
திகதி : 28/20/2020

S. Hettiarachchi
Secretary
Ministry of ...

........................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 20/02/25

எம். பி. ஆர். புஷ்பகுமார
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
நுவரெலியா நிர்வாக மாவட்டம்.

........................
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2020/2/25

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

# 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
# நிதி நிலைமைக் கூற்று

| | உண்மை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| திறைசேரி பணி மற்பணம் பெறுகைகள் | 2,872,675,878 | 1,818,381,327 |
| பிரதான லெஜர் பெறுகைகள் | 162,098,241 | 132,029,793 |
| ஏனைய பெறுகைகள் | 161,149,222 | 103,578,430 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **3,195,923,341** | **2,053,989,550** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | | |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 479,683,380 | 451,843,276 |
| பிரதான லெஜர் செலவு | 2,140,576 | 2,089,768 |
| நிதிச் செலவுகள் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 34,163,984 | 264,728,839 |
| ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 1,018,913,219 | 964,871,360 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **1,534,901,159** | **1,683,533,243** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **1,661,022,182** | **370,456,307** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை விலகும் ஏற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | 115,500 |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **115,500** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 22,128,276 | 23,196,843 |
| ஏனைய திணைக்கள மூலதனச் செலவு | 1,634,715,951 | 346,474,086 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **1,656,844,227** | **369,670,929** |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(1,656,844,227)** | **(369,555,429)** |
| **பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **4,177,955** | **900,878** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புகளின் மாற்றம் | | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | **4,177,955** | **900,878** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | |

## 3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் -அறிக்கையிடலின் அடிப்படை

### 1) அறிக்கையிடல் அடிப்படை

நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2019 ஜனவரி முதல் டிசெம்பர் 31 வரையயானதாகும்.

### 2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

### 3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங்காணப்படுகின்றது.

### 4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பகத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றது.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

### 5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

### 6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

